




# கலை தரிசனம்!

'கோடுகளின் இசை, வர்ணங்களின் தகிப்பு, களி மண்ணின் உச்சரிப்பு, உலோகத்தின் உரையாடல், கல்லின் மௌனம் - இவற்றின் மொழியில்தான் பேசுகிறது இந்தப் புத்தகம். இந்த நூல் தன்னிலிருந்து வேறுபட்ட ஒன்றைப் பேசுவதில்லை. தன்னையே பேசிக்கொள்கிறது' - என்ற அறிமுகத்துடன் விரிகிறது 'தேடலின் குரல்கள்'!

தமிழக ஓவிய சிற்ப இயக்கத்தை அதன் வேர்களையும் வேரடி மண்ணையும் பேசுவதிலிருந்து அந்த நதியின் உயிர்ப் பயணத்தை... ஒரு புத்தகப் பரிசலில் ஏறி அதன் போக்கிலேயே போய்ப் பார்க்கிற பரவசத்தை உண்டு பண்ணுகிறது புத்தகம்.

குகை ஓவியம் முதல் உலோகச் சிற்பங்கள் வரை புரட்டப் புரட்டப் பக்கத்துக்குப் பக்கம் பளிச்சிடுகிறது கலையின் அழகு. கலைஞர்களை, அவர்களின் படைப்புகளை, பார்வைகளைச் சொல்கிற ஒவ்வொரு விஷயமும் வியப்பைத் தருகிறது. காண வேண்டிய தரிசனம். தொகுத்த இந்திரன் பாராட்டுக்குரியவர்.


புத்தகத்திலிருந்து...

'பசியின் வலி'



இந்தியாவின் மாபெரும் சிற்பிகளில் ஒருவர் தேவி பிரசாத் ராய் சௌதுரி. அவரது முப்பதாவது வயதில் மதராஸ் ஓவியப்பள்ளியின் முதல்வர் பொறுப்பை ஏற்ற காலகட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இவர், 1929-லிருந்து 1957 வரை மதராஸ் கலைப்பள்ளியின் முதல்வராக இருந்த காலத்தில் தமிழக ஓவிய இயக்கத்துக்குப் புதிய சிறகுகளைக் கொடுத்தார் என்று சொல்லலாம். தனது மாணவர்களின் திறமைகளைச் சரிவர எடைபோட்டு, அதனைப் பாராட்டி வளர்த்த மிகச் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார். இவரது சென்னை வருகையினால் மதராஸ் கலைப்பள்ளியில் வங்காளத்திலிருந்து கோபால் கோஷ், சுஷில் முக்கர்ஜி, பரிதோஷ் சென் போன்றவர்கள் வந்து கல்வி கற்றதினால் சென்னையின் கலை இயக்கம், தேசிய அளவில்

செய்வதை அனுபவிக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் அதன் அழகியல் அல்லது தத்துவார்த்த முக்கியத்துவம் அல்ல. மாறாக பல்வேறு சாதனங்களில் நான் எனது திறமையைச் சோதிக்க விரும்புகிறேன் என்பதுதான். என்னை நம்புங்கள். நான் மல்யுத்தத்தையும், குஸ்தியையும் எந்த அளவுக்கு விரும்புகிறேனோ அதே அளவுக்குத்தான் கலையை விரும்புகிறேன். இது தவிர கலையைப் பற்றி சிறப்பானதாக எதுவும் இல்லை என்று நினைக்கிறேன். விமரிசனங்கள் என்னைக் கவலை கொள்ளச் செய்வதே இல்லை. நான் யார், நான் என்ன செய்கிறேன் என்பதைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் கவலைப்படுவதே இல்லை. அவை என்னுடைய ஆர்வத்தைத் தூண்டுவது இல்லை. கலை என்பது எனது ரொட்டியும் வெண்ணெயுமாக இல்லாதபோது, விமரிசனம் என்பது அவர்களின் வெண்ணெயும் ரொட்டியுமாக இருக்கிறது."



'வீரக்கல் நினைவு'
– நந்தகோபால்



சோழமண்டல ஓவியர் கிராமம்...

மேற்கொண்டிருந்தார். அளவில் பெரிதாக இவர் படைத்த சிற்பங்களில் சென்னையிலுள்ள மகாத்மா காந்தி, உழைப்பாளர் சிலை, டெல்லியிலுள்ள தியாகிகள் நினைவுச் சின்னம் ஆகியவை முக்கியமானவை. ஒரு மாபெரும் கலைஞன் என்பதையும் மீறி, மேதைமை உள்ள ஒரு ஆசிரியர் என்ற வகையில் டி.பி.ராய் சௌதுரி சென்னையில் உருவாக்கிய புதிய தலைமுறையே நவீன ஓவிய இயக்கத்தைத் தமிழகத்தில் முன்னெடுத்துச் சென்றது.

வெளியீடு: தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு, அருங்காட்சியக வளாகம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-8.

# ராய் சித்திரம்

ராய் சௌதுரி

"என்னை வெளிப்படையாக இருக்க விடுங்கள். நான் ஒரு அறிவு ஜீவியாகப் பாசாங்கு செய்ய விரும்பவில்லை. நான்




கோட்பாடுகளில் விருப்பம் கொண்டிருக்கவில்லை. கலை செய்து முடிக்க வேண்டிய ஒரு வேலை என்று கருதுகிற நான் கலையை கற்பனை நவிற்சி செய்ய விரும்பவில்லை. நான் ஓவியத்தையும் சிற்பத்தையும்

அடையாளம் காணப்பெற்றது. ஒரு குத்துச்சண்டை வீரராகவும், வேட்டைக்காரராகவும் இருந்த இவர், இயல்பாகவே கொண்டிருந்த வேகமும், வீச்சும் இவ்ரது க்லை வெளிப்பாடுகள் அனைத்திலும் வெளிப்படுவதாகும். தைலவண்ணங்களைக் காட்டிலும், நீர்வண்ணத்தை அதிகம் நேசித்த இவர், நீர்வண்ண ஓவியங்களில் உன்னதங்களைத் தொட்டவர். இருந்தபோதிலும்

வித்யாஷங்கர்



குளியல்





'இயேசு' – பி.வி. ஜானகிராமன்

இவர் ஒரு சிற்பி என்றே பேரும் புகழும் பெற்றார். எந்த குறிப்பிட்ட பாணியின் எல்லைக்குள்ளும் சிக்கிக்கொள்ளாமல் ஒரு சர்வதேசக் கலை வெளிப்பாட்டை இவர்